Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 19 (03 07 1991) புதன்கிழமை ஓசை: 135

## சாகித்திய பரிசுத்தொகை காசோலைகள் வந்தன

(நல்லூர்)

1990 ஆம் ஆண்டிற்கான சாகித்திய மண்டலப் பரிசு விருதுகளை நேரடியாகப் பெறாத தமிழ் அறிஞர்களுக்கு பரிசுப்பணம் காசோலையாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பன்னிரெண்டு வருட இடைவெளிக்குப் பிறகு தமிழ் அறிஞர்களுக்கு இப்பரிசுத்தொகை இம்முறைதான் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது சிறிலங்கா (6 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் மலேரியா நோய் தீவிரமாகப் பரவும் அபாயம்

## வீரவணக்கம்

### சி. சுரேஸ்குமார் வினோ

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் தீவிர ஆதரவாளரான சிவபாதம் சுரேஸ்குமார் (ஏழாலைதெற்கு ஏழாலை) என்பவர் பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் காயமடைந்திருந்தார். இவர் நேற்றுமுன்தினம் மரணமடைந்து விட்டார்.

மேலும் ஆனையிறவில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட (6 ஆம் பக்கம் பார்க்க)

## இவ்வாண்டின் இறுதியில் 6லட். நோயாளர்

(கொழும்பு)

மலேரியாக் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளாது விட்டால் ஆண்டு முடிவில் 6,00,000க்கு அதிகமானோர் மலேரியாவால் பாதிக்கப்படும் அபாயம் ஏற்படும் என்று சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

சென்ற ஆண்டை விட இவ்வாண்டில் மலேரியாக் காய்ச்சல் அதிகமானோரைப் பீடிக்கும் என்று புள்ளிவிபரக் கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன. முதல் மூன்று மாதங்களில் மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,52 900 அதிகமாக உள்ளது. இதே வேளை கடந்த ஆண்டில் 2 80 000 பேர் மலேரியாவால் பாதிக்கப்பட்டனர்.

மலேரியாத் தடுப்பு வேலைகளை மலேரியா எதிர்ப்பு இயக்கத்திடமிருந்து (ஏ எம். சி) பறித்து சுகாதார வைத்திய அதிகாரியிடம் கையளித்ததுதான் இந் நோய் பரவுவதற்கான முக்கிய காரணம் என்று இந்த அதிகாரி தெரிவித்தார். சுகாதார வைத்திய அதிகாரிகள் மலேரியாத் தடுப்பு வேலைகளைக் கவனியாமல் தனிப்பட்ட வைத்தி (6 ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு 5 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடமேல்மாகாணத்தின் எல்லைப்புறத்திலுள்ள வர்த்தகப்பகுதியொன்றில் குண்டு ஒன்று வெடித்ததில் ஐந்து பேர் கொல்லப்பட் (6 ஆம் பக்கம் பார்க்க)

## 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' தொடர்பாக பேச்சுவார்த்தை

(லண்டன்)

சிறிலங்கா அரசும்: அமெரிக்க அரசும் அமெரிக்காவின் ஒலிபரப்புத் தாபனமாகிய "வொய்ஸ் ஒப் அமெரிக்கா" என்னும் வானொலி அமைப்புக்கு இலங்கையில் இடம் தருவது பற்றி பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றது.

கொழும்புக்கு வடக்கே ஈரானவெல என்ற இடத்தில் 1985ல் இவ் வானொலி அமைப்புக்கு நீண்டகாலக் குத்தகையாக இடமளிக்கப்பட்டிருந்தது. இதை இப்போது புதுப்பிக்கவே பேச்சுவார்த்தை நடைபெறுகிறது முன்னர் இதற்க- (6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தமிழர் கொலை; ஐவர் கைது; வீட்டிற்கு தீவைப்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்திலே கிராமப் பகுதிகளைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் அவ்விடத்தைச் சேர்ந்த பொதுமகனொருவரைச் சுட்டுக்கொன்றதுடன் மேலும் ஐவரைக் கைதுசெய்துமுள்ளனர் அத்துடன் பொது மக்களிற்குச் சொந்தமான முப்பத்தைந்து வீடுகளையும் ஆறு வைக்கோல் சூடுகளையும் தீயிட்டுக் கொளுத்தி நாசமாக்கியுள்ளதாகவும் தெரியவருகிறது

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. கட்டைபறிச்சான், தோப்பூர் ஆகிய இடங்களில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் இறால்குழி, இத்திக்குளம், பறவெட்டைக்குளம், நெய்பந்திக்குளம், உப்புவெளி ஆகிய இடங்களைச் சுற்றி வளைத்தனர்.

இச் சுற்றிவளைப்பின்போது உப்புவெளியில் வைத்து இன்னத்தம்பி (பள்ளிக்குடியிருப்பு) என்பவரை சுட்டுக் கொன்றுள்ளனர்.

இதே வேளை இறால் குழியில் ஐந்து பொதுமக்களைக் கைது செய்தும் மரவெட் (6 ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றி வளைக்க முயன்ற இராணுவம் மீது தாக்குதல்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் முகாமைச் சுற்றி வளைக்க முயன்ற சிறிலங்கா இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது

கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 6-10 மணியளவில் கட்டைபறிச்சான், தோப்பூர் ஆகிய இடங்களில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கட்டைபறிச்சானில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாமைச் சுற்றி வளைக்க முயன்றனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு முகாம் சூழ தொடர்ந்து குண்டு வீச்சு

(கிளிநொச்சி)

ஆனையிறவு இராணுவமுகாமைச் சூழவுள்ள பகுதிகளில் கடந்த சில நாட்களாகச் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானங்களும், கெலிகொப்டர்களும், பயணிகள் விமானமும் தொடர்ச்சியான விமானத் தாக்குதலைகாலையிலும், மாலையிலும் மேற்கொண்டுவருவதாக அங்கிருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றும் காலை 7 55மணியில் இருந்து 8 25மணிவரை இதே பகுதியில் இரண்டு (6 ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக்காயத்துடன் இல. தமிழர் சடலம்

(சென்னை)

முப்பது வயது மதிக்கத்தக்க இலங்கை வாலிபர் ஒருவரது சடலம் துப்பாக்கிச் சூட்டுக்காயத்துடன் சென்னை அண்ணா மாவட்டத்தில் லக்ஷ்மிபுரம் கிராமத்தில் குளம் ஒன்றிற்கு அருகில் கிடக்கக் காணப்பட்டது, சடலத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கிடந்தது; கண் புருவத்துடன் ஒட்டியதாக சூட்டுக்காயம் இருந்தது சம்பவம் பற்றி அறிவிக்கப்பட்டதும், சி. பி. ஐ அதிகாரிகள் ஸ்தலத்துக்கு விரைந்து சடலத்தைப் பார்வையிட்டனர்; (6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ அதிகாரிக்கு அமெ. விசா வழங்க மறுப்பு

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்புப் படை சிரேஷ்ட அதிகாரி யொருவர் இராணுவப் பயிற்சி தொடர்பான பட்டப் பின் படிப்புப் பெற அண்மையில் அமெரிக்கா செல்ல விருந்தார். கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மனித உரிமைகள் மீறல் தொடர்பான காரணத்தைக் காட்டி அவருக்கு விசா வழங்க மறுத்துள்ளது;

மேற்படி உயரதிகாரி தென்பகுதியில் ஜே வி பி யினரின் ஆதிக்கத்தை அடக்குவதில் முக்கிய பங்கினை வகித்தவராகும்.

## தமிழக சபாநாயகராக சேரப்பட்டி முத்தையா

(சென்னை)

தமிழ் நாட்டின் பத்தாவது சட்டப்பேரவைத் தலைவராக அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் சேரப்பட்டி முத்தையா தேர்ந்தெடுக்கப்படவுள்ளார். இதே கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் பேராசிரியர் கே. பொனுச்சாமி பேரவை யின் துணைத்தலைவராகிறார்.

பேரவைத்தலைவர் துணைத் தலைவர் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்வது நேற்று முற்பகலுடன் முடிந்தபோது, இவர்கள் இருவர் மட்டுமே வேட்பு மனுக் (6 ஆம் பக்கம் பார்க்க)

## விளையாட்டு ஒழுங்கு விதிகள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரால் நடாத்தப்படும் தியாகி திலீபனின் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான தடகள விளையாட்டு விழா பற்றி ஒழுங்கு விதிகள் வெளியிடப்பட்டுள்ளன

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ராஜன் மாவட்ட விளையாட்டுக்குழு சார்பாக வெளியிட்டுள்ள இவ் ஒழுங்குவிதிகள் நாளை ஈழநாதத்தில் வெளி வரும்.

## வடக்கு-கிழக்கு இராணுவ அதிகாரிகளுக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் பணியாற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் கொழும்பில் தங்கியிருக்கும் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் குடும்பங்கள் தங்கியிருக்கும் பகுதிகளில் மற்றுமொரு குண்டுவெடிப்பை நடத்தப் புலிகள் திட்டமிட்டுள்ளதாகக் கிடைத்த தகவல்களையடுத்தே இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாம்;

## வரிவிளம்பரம்

**ஒத்துமாறல்**

90/91 கல்வியாண்டு கிழக்கிலங்கை பல்கலைக்கழகம் மூகாமைத்துவ கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளேன். இதே பயிற்சி நெறிக்கு யாழ் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் ஒத்து மாற விரும்பின் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். T. உதயகுமார் "சந்திரவாசம்" சம்பல்லேன் திருநெல்வேலி, (R/1502)

**ஜீவிதா**

தொழில் நுட்பக் கூடம்

ரி. வி. டெக், றேடியோ, மணிக்கூடு, றிவைண்டிங் மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும் விற்பனையாளர்களும் வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும் புதிய பழைய பாடல்களும் (புரட்சிப் பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும் ஒட்டுமடம் சந்தி ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (B-2764)

## குமரையா ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டி

(யாழ். விளையாட்டுநிருபர்)

யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள அமரர் கே. குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான நொக்கவுட் முறையிலான உதைபந்தாட்டப்போட்டி இம்மாதம் நடுப்பகுதியில் பாஷையூர் சென் அந்தனீஸ் விளையாட்டுத் திடலில் ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டியில் தலைசிறந்த 18 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

இப்போட்டியில் முதலாம் இடத்தைப்பெறும் அணிக்கு முரசொலி விளையாட்டுத் துறை செய்தியாளர் சப்டன் டி. எ. எம். குணசிங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பெறுமதிமிக்க சுழல் வெற்றிக் கிண்ணம் வழங்கப்படவுள்ளது. இரண்டாம் இடத்தைப்பெறும் அணிக்கு யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் அன்பளிப்புச்செய்த வெற்றிக் கிண்ணம் வழங்கப்படவுள்ளது. (42)

## மண்ணெண்ணெய் அனுமதி

(வவுனியா)

தாண்டிக்குளம் ஊடாக வடபகுதி போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் பின் ஆளுக்கு 5 லீற்றர் மண்ணெண்ணெய் எடுத்துவர இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர் எனத் தெரிய வருகிறது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| ஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 29 - 12 - 1967 | 03 - 07 - 1990 |

## மேஜர் பவான்

### (சாந்தலிங்கம் நாகேந்திரராசா)

(சூரன்கல்லில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணம்)

சிங்களத்தின் காடையரும், முப்படையும்
முஸ்லீம் குண்டர்களின் மூர்க்கத்திலும்
காட்டிடும் கயவர் கூட்ட மத்தியிலும்
எனான் உன்பாதை நீண்டதடா.

சிரித்த உன் முகம் சிந்தனையில் ஓயவில்லை
அம்மாவுடன் சகோதரரும் ஆருயிர்த் தோழரும்
திருமலையின் மூதூரும் தினம் தினமாய்க் கேட்குது
பவான் உன் பாதை தொடருதடா,

பிணத்தின் நடந்து மண்ணைப் பிடிப்பினும்
பெற்றதாய் நாட்டை விடுவதோ?
அகதியாய் அலைவதோ? அழிவதோ?
பவான் உன் பாதை உணர்த்துதடா.

சீறி வந்த சிங்களத்தை சிதறடித்தாய்
அலறி அழுத தமிழினத்தை அணைத்து நின்றாய்
தாக்குதலால் தாயகத்தை மீட்டுவந்தாய்
பவான் உன் பாதையில் போகிறோமடா,

இவருடன் வீரமரணமடைந்த ரஜனி, பல்லவன்
ஆகியோருக்கும் எமது அஞ்சலிகள்!

திருக்கோணமலை தொடர்பகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

துயருறும்
அம்மா, அக்காமார்,
தங்கைமார், மருமக்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

(B-2759)

## நினைவு கூருகின்றோம்...



**1991 - 07 - 03** | **மேஜர் பவான்**



**2ஆம் லெப். மரியா**



**ராதை**

1987 ஆம் ஆண்டு திருக்கோயில் தாண்டியடிப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

எஸ். பி
லக்கி
சலீம்
சின்னத்தம்பி

மட்டக்களப்பில் கோயில் திருவிழாவில் கலந்து கொண்ட பொதுமக்கள் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த 17 தமிழர்கள்

மட்டக்களப்பு படுவான்கரை பாவற்கொடிச் சேனைப் பகுதியில் சிறிலங்காப் படையினரின் விமானத்தாக்குதலால் உயிரிழந்த 3 தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு குருந்தடிச் சேனையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
2ஆம் லெப். சங்கிலி (காசுபதி வடிவேல் - ஆரையம்பதி)

இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
நோபேட் (நா. சிறீபாலன் - ஆரையம்பதி)

வட்டக்கச்சியில் இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதலால் வீரமரணமெய்திய
2 ஆம் லெப். ரவியம்மான் (சுயம்பு தெய்வேந்திரம் - ஓமந்தை)

விஸ்வமடுவில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய
2 ஆம் லெப். மரியா (புவனேந்திரசோதி புவேந்திரன் - வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தங்கேணி)

அளம்பிலில் இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதலால் வீரமரணமெய்திய
ராதை (விக்கினேஸ்வரி கணேசு - இராசவீதி, நீர்வேலி)

நெடுங்கேணியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்ணும் குழந்தையும்

1989 ஆம் ஆண்டு புளியங்குளத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
விஜி (இ. சந்திரகாந்தன் - கொக்குத்தொடுவாய்)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் இந்தியப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்

கிளிநொச்சியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 6 தமிழர்கள்

1990 ஆம் ஆண்டு திருக்கோணமலை சூரன்கல் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலின்போது வீரமரணமெய்திய
மேஜர் பவான் (சா. நாகேந்திரராசா, கிளிவெட்டி)
ரஜனி (த. சங்கர் - தம்பலகாமம்)
பல்லவன் (ந. யோகராசா - நொச்சிக் குளம்)

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினரின் நடவடிக்கைகளால் எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 5 தமிழர்கள்

கதிரவெளிப் பகுதியில் சிறிலங்காப் படையினரின் விமானத் தாக்குதலால் கொல்லப்பட்ட சிறுவன், இளம் பெண் உட்பட 3 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B- 2763)

# பல களங்கள் கண்ட போராளி

# லெப். கேணல் சந்திரன்

(வவுனியா)

மாவீரர் சந்திரன் அவர்களை தமிழீழத்தில் தெரியாத ஒழுங்கைகள் கிடையாது. அவரைப்பற்றி பேசாதவர்கள் இடையாது. மாபெரும் தியாகி அவர் மக்கள் மனதில் நிலைத்து நிற்கவேண்டியவர்.

காக்கையன்குளம் பகுதியில் கடந்த 25ஆம் திகதி இரவு இடம்பெற்ற லெப். கேணல் சந்திரனின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு ஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட அக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது, சந்திரன் அவர்கள் பல களங்கள் கண்ட போராளி எமது இயக்கத்திற்காக பல போராளிகளை திரட்டியுள்ளார். கொக்காவில் இராணுவ முகாம் தகர்ப்பின் போது காயமடைந்திருந்த அவர். கடலில் அரச படையினருக்கும், எம்மவர்களுக்குமிடையில் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்.

இந் நாளில் சந்திரனுடன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட ஏனைய போராளிகளையும் நாம் நினைவு கூருகின்றோம் என்றார்

அவர் அங்கு மேலும் உரையாற்றும் போது, பேச்சுவார்த்தை மூலம் யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படுவது மூலம் சிங்கள ஏகாதிபத்திய அரசு தமிழீழ மக்களின் பிரச்சினையைத் தீர்க்கும் என்று எவரும் அபிப்பிராயம் கொள்ளாதீர்கள். பல பேச்சுவார்த்தைகள் இங்கு இடம்பெற்றுள்ளன. பல யுத்த நிறுத்தங்கள் இடம்பெற்றுள்ளன ஆனால் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு முன்வரவில்லை.

அனைத்து தமிழீழ மக்களும் ஆயுதம் ஏந்தி போராடுவதன் மூலமே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

கடந்தவருடம் ஜூன்மாதம் யுத்தம் ஏற்பட்டதன் பின்னர் நாம் தமிழீழத்தில் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளோம். உலகம் போற்றத்தக்க விதத்தில் நாம் வளர்ச்சியடைந்துள்ளோம்.

இன்று இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருக்கும் தமிழ் மக்கள் நாயிலும் கேவலமாக மதிக்கப்படுகின்றனர். சொந்த தேசத்தில் இருந்து சுதந்திரத்திற்காக உழைப்பதை விட்டு விட்டு இக்கேவலமான வாழ்வை அவர்கள் அனுபவிக்க வேண்டுமா? இது தேவைதானா? என்று தமது உரையின் போது அவர் குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் ராம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வன்னிப் பிராந்திய மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் ரதி, முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஜெனி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர் கூட்டத்தின் பின்னர் சந்தனின் புரட்சிகரன்கள் இசை விருந்தும் இடம்பெற்றது (மு

# ராஜீவின் கொலையும் புலிகளின் எண்ணமும்

### - இந்தியா ருடேயின் கணிப்பில்

மே மாதம் 21ஆம் திகதி முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி தமிழகத்தில் கொலை செய்யப்பட்டது தொடர்பாக பலவகையான ஊகங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அண்மையில் இது தொடர்பாக இந்தியப் புலனாய்த்துறையினரால் வெளியிடப்படும் ஊகங்களின் அடிப்படையில் இக்கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என கூறப்படுகின்றது. விடுதலைப்புலிகள் இக்கொலையைச் செய்திருந்தால் அதற்குரிய காரணங்கள் எதுவாக இருக்கும் என்பது பற்றி பலரும் பலவிதமான கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். இதில் 'இந்தியா ருடே' சஞ்சிகை வெளியிடும் காரணம் கீழ் வருமாறு அமைந்துள்ளது.

விடுதலைப் புலித் தலைவர் பிரபாகரனை 1987இல் டெல்லிக்கு வரும்படி ராஜீவ் காந்தி அழைத்தார். பிரபாகரன் அங்கு போனதும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டதாகக் கையெழுத்துப் போட்ட பின்புதான் பிரபாகரன் விடுதலை செய்யப்பட்டார். 'ராஜீவ் காந்திக்கு சரியான பாடம் கற்பிப்பேன்' என்று அப்பொழுதே ஒரு கூட்டாளியிடம் பிரபாகரன் கூறியதாகச் சொல்லப்படுகிறது.

அப்படிப் பழிதீர்க்க வேண்டும் என்ற எண்ணத்தைவிட விடுதலைப் புலிகளின் கொள்கைதான் இந்தக் கொலைக்குக் காரணம் என்று எடுத்துக் கொள்ளலாம். இந்தியா ஒன்றாக இருக்கும் வரை சுதந்திர ஈழம் கிடைக்காது என்று விடுதலைப்புலிகள் கணக்கிட்டிருப்பார்கள். இந்தியா முழுக்க செல்வாக்குள்ள தலைவர் ராஜீவ் காந்திதான். வடநாட்டையும், தென்னாட்டையும் இணைத்து வைத்திருக்க அவரால் மட்டும்தான் முடியும். இது சுதந்திர ஈழம் பெற நீண்டகாலத் தடையாக இருக்கும்.

ராஜீவ் காந்தி இல்லாவிட்டால் தமிழ்நாட்டு மக்களிடம் ஈழ மக்களுக்கு ஆதரவு அளிக்கும் எழுச்சியை ஏற்படுத்த முடியும். ராஜீவ் கொலையால் இப்போதைக்கு தமிழ் நாட்டின் அனுதாபத்தை இழப்பது சிறிய நட்டமே ஆனால் அதன் பின் கிடைக்கும் அனுகூலம் பெரிய ஆதாயமாக இருக்கும் என்று கணக்குப்போட்டு ராஜீவ் காந்தியைக் கொலை செய்திருப்பார்கள் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக இப்படியொரு விளக்கம் அளித்திருக்கிறது இந்தியா ருடே.

# தென் ஆபிரிக்காவிற்கு சிறிலங்கா ஆதரவு

(கொழும்பு)

ஒன்பது வருடங்களுக்கு முன்னர் தென்னாபிரிக்காவுக்குச் சென்று விளையாடியமைக்காக அதன் கிரிக்கட் வீரர்களைத் தண்டித்த இலங்கை இப்போது தென்னாபிரிக்கா சர்வதேச கிரிக்கெட்டில் மீண்டும் பங்கேற்பதை ஆதரிக்கப் போவதாக அதிகாரிகள் ஞாயிறன்று தெரிவித்தனர்.

ஜூலை 10 - 11 இல் லண்டனில் நடைபெறவிருக்கும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கூட்டத்தில் வைத்து இலங்கையின் ஆதரவைத் தானும் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் இயன் பீரிகம் வெளிப்படுத்தப் போவதாக இச்சபையின் செயலாளரான விஜேந்திரகுமார் கூறியுள்ளார்.

# வவுனியா மோதலில் இரு புளொட் பலி

(வவுனியா)

வவுனியா நொச்சிமோட்டையில் கடந்த சனியன்று இடம்பெற்ற மோதல் ஒன்றில் இரண்டு புளொட் உறுப்பினர் கொல்லப்பட்டதுடன் ஒருவர் காயமடைந்ததாக புளொட் கூறியுள்ளது.

இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்தை விஸ்தரிக்கும் முயற்சியில் இடம்பெற்ற இம்மோதலின் போது செட்டிகுளத்தைச் சார்ந்த சித்திரவேலு சேகர் )திருமலையைச்சேர்ந்த இராமநாதன் ஆகிய இருவரும் கொல்லப்பட்டதாக புளொட் இயக்கம் கூறியுள்ளது.

# பலகட்சிக் கோரிக்கை எதிர்ப்புரட்சித் தன்மையது

(பீகிங்)

பலகட்சி ஆட்சிக்காக எழுப்பப்படும் கோரிக்கை எதுவும் எதிர்ப் புரட்சித் தன்மை கொண்டவையாகவே கருதப்படும் என்று சீன அரசு அறிவித்துள்ளது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எழுபதாவது ஆண்டு நிறைவையொட்டிய வைபவம் ஒன்றில் மேற்கண்ட கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

## சிந்திய குருதி கொஞ்சமா?

நாம் சிந்திய குருதி கொஞ்சமா? - புலி
நரியைப் பார்த்து அஞ்சுமா?
தூக்கடா தமிழா! துவக்கினை - தமிழ்த்
தாயகம் மீளும் எமக்கடா!

வேங்கைத் தமிழா ஓடிவா - நம்
விடுதலைக் கீதம் பாடிவா!
தூங்கும் பொழுதைக் கொன்றிடு - போர்க்
களத்தில் புகுந்து வென்றிடு!

எங்கள் தாயகம் எரியுதே – பார்...
எங்கும் சிங்கள நரியடா;
தங்கத் தமிழா! எழுந்திடு - அவர்
தலைகளை வீழ்த்தித் திரும்பிடு!

கவிஞர்

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

நன்றி: முத்தமிழ் விழாமலர்

# மாகாணப் போட்டிக்குத் தெரிவு

முன்பு கோட்ட மட்டத்தில் தமிழ்த்திறனப்போட்டிகள் நடைபெற்று முதலிடம் பெற்றவர்களுக்கான மாவட்டப் போட்டிகள் கடந்தவாரம் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டபோது, சிறுவர்களுக்கான கீழ் பிரிவு கட்டுரை ஆக்கப் போட்டிகளில் முதலாம் பிரிவில் யாழ் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த சென் ஜோன் பொஸ்கோ மாணவி செல்வி அனுரஜீ முதலாம் இடத்தையும், இரண்டாம் பிரிவில் வேலணைக் கோட்டத்தைச் சேர்ந்த மாணவன் செல்வன் சிரோதயன் முதலாம் இடத்தையும் பெற்று மாகாணப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (11)

# 2,37,000 வழக்குகள் தேக்கம்

(கம்புறுப்பிட்டி)

இலங்கை பூராகவும் நீதிமன்றங்களில் இன்று 2,37 000 வழக்குகள் விசாரணை செய்யப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன இவற்றை விசாரணை செய்து முடிக்க மிக வேகமாக செயலாற்றும் நீதிமன்ற முறையொன்றைசெயல் படுத்தவிருக்கின்றோம் என்று நீதி, உயர்கல்வி அமைச்சர் ஏ ஸி எஸ் ஹமீது கம்புறுப்பிட்டியில் நடைபெற்ற கம்உதாவ விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

# உதைபந்தாட்ட இறுதிப்போட்டிகள்

(வடமராட்சி)

கரும்புலி கப்டன் மில்லர், மேஜர், சுமன் வீரவேங்கை விக்கன் ஞாபகார்த்தமாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இவர்கள் வீரமரணமடைந்த தினமான எதிர்வரும் 5ஆம் திகதி மேற்படி மைதானத்தில் நடைபெறும்.

அன்றையதினம் இப்பாடசாலையில் அமைக்கப்பட்ட மாவீரர் கலையரங்கத்தில் அஞ்சலிக் கூட்டமும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளது. (18)

# 3 இலங். தமிழ்ப் பெண்கள் இராமேஸ்வரத்தில் கைது

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரம் துறைமுகப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய மூன்று இலங்கைப் பெண்கள் தமிழகப்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் கடவுச்சீட்டு, வெளிநாட்டார் கட்டளைச் சட்டத்தின்கீழ் பத்மா (50), சுசீலா (23), புவனேஸ்வரி 31) ஆகிய இம்மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இவர்கள் தகுந்த பிரயாணப் பத்திரங்களின்றி வந்து சேர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# உபகரணத் தேவையில் மட்பாண்ட உற்பத்தி

இன்றைய பொருளாதார நெருக்கடியில் சமையல்த் தேவையான உபகரணத் தேவையை பூர்த்தி செய்ய மட்பாண்டங்களை உருவாக்கி உபயோகிப்பது சிறந்த வழியாகும். உலோகப் பாத்திரங்களைப் போல் அல்லாது மண்ணினால் செய்யப்படும் பாத்திரங்களில் நுண்துளைகள் அதிக அளவில் காணப்படும். இவை உறிஞ்சற் பரப்பு உள்ளவை; இதனால் உணவுப் பொருட்களில் உள்ள அதிக நீரை உறுஞ்சிக் கடத்தும் தன்மையுடன் உணவைப் பேணுவதற்கும் உதவுகின்றது. அத்துடன் மட்பாண்டங்கள் உணவில் உள்ள நச்சுத் தன்மையை உறிஞ்சிக் கொள்ளும் இதைவிட அமிலக் காரத் தன்மையினால் சேதம் அடையாது சமையலில் மெதுவாகவும் சீராகவும் உணவுப் பொருள்கள் சூடேற்றப்படுவதால் சமைக்கப்படும் உணவு சுவையுடையதாக காணப்படும்

மட்பாண்ட உற்பத்தியில் சிலவகையான பொருள்கள் மாத்திரமே உருவாக்கப்பட்டு அவை நுகர்ச்சி இன்றி சேதமடைவதைத் தவிர்க்கப்பட வேண்டும். மட்பாண்ட உற்பத்தித்துறை பல மாறுதல்களைச் செய்ய முனைய வேண்டும். புதிய உற்பத்தி பொருள்களான குடிநீர் சுத்திகரிக்கும் சாதனம், கோப்பை, உயிரியல் வாயு, அடுப்பு, இரட்டை சூட்டடுப்பு தட்டுகள், இருக்கைகள், குவளைகள், மலசல கூட உபகரணங்கள், மற்றும் பல நானாவித பாவனைப் பொருள்களை உருவாக்கி உபயோகிக்க முன்வர வேண்டும்

மலிவானதும் பயனுள்ளதுமான மூலப் பொருள்களை எம் மண்ணில் இருந்து புதிய தொழில் நுட்பங்களை புகுத்தி மட்பாண்டத் துறையை வளர்ச்சி அடையச் செய்து தமிழீழ மக்களின் பெருமளவு உபகரணத் தேவையை இலகுவாக பூர்த்தி செய்ய முடியும்.

தமிழீழ ஆய்வு நிறுவனம்.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு புதிய பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனைக்கு இம்மாதம் முதல் புதிய பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை காலமும் பணிப்பாளராக பணியாற்றிய செல்வி புஷ்பா சண்முகம் ஓய்வு பெற்றதையடுத்து இவ் வைத்திய சாலையில் சட்டவைத்திய அதிகாரியாக பணிபுரியும் டாக்டர் திருமதி கனகரட்ணம் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (

# மட்டு. வைத்தியசாலையில் வைத்திய நிபுணர் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில், சத்திர சிகிச்சை வைத்தியர்கள் இல்லாததால் நோயாளர்களை கொழும்பு, பொலன்னறுவை போன்ற வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லும் நிலைமை உருவாகியுள்ளது.

வடக்கு - கிழக்கில் எம். எஸ். எப். தொண்டர் ஸ்தாபனம் சமூகப்பணியில் ஈடுபட்டிருந்த சமயம் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர்கள் இருவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் கடமையாற்றி வந்தனர்.

தற்போது எம். எஸ். எப் நிறுவனம் தனது சேவையை இடைநிறுத்திக் கொண்டதை யடுத்து இங்கு பணியாற்றிய பிரெஞ்சு டாக்டர்கள் இருவரும் இங்கிருந்து சென்றுவிட்டனர். இதனால் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய நோயாளிகள் பலர் கொழும்பு, பொலன்னறுவை வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படுவது ஒரு புறமிருக்க, சிகிச்சை பெற முடியாத துரதிஷ்ட நிலைமையும் சில வேளையில் ஏற்படுகிறது. இதே வேளை மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மூன்று அம்புலன்ஸ் வண்டிகளே உள்ளன. தினசரி ஒரு அம்புலன்ஸ் நோயாளிகளை வேறு ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்ல தேவையாக உள்ளது. அதோடு கிரான், வெளி, நாவற்காடு, ஏறாவூர், கிரான், ஓட்டமாவடி ஆகிய இடங்களில் நடைபெறும் நடமாடும் சிகிச்சை நிலையங்களுக்கு வைத்தியர் மற்றும் ஊழியர்களை எடுத்துச் செல்லவும் அம்புலன்ஸ் தேவைப்படுகிறது. வைத்திய சாலை நிர்வாகம் அம்புலன்ஸ் வண்டி பற்றாக்குறையினால் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகிறது.

# இராமநாதபுரத்தில் பரவலாக சுவரொட்டிகள்

(இராமநாதபுரம்)

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக தேடப்படும் ஒற்றைக்கண் ஆளைக் காட்டிக் கொடுப்போருக்கு சன்மானம் வழங்குவதாகக் கூறும் சுவரொட்டிகள் இராமநாதன் மாவட்டத்தில் பரவலாக எங்கும் ஒட்டப்பட்டுள்ளன. தொண்டி, சாயல்குடி, கீழக்கரை, இராமேஸ்வரம், இராமநாதபுரம் பகுதிகளில் இச் சுவரொட்டிகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

இதேவேளை வைகை கடுகதி ரயிலில் டிக்கெட்டின்றிப் பிரயாணம் செய்த கமலேஸ்வரன் என்ற இலங்கை அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த ஒருவரை தமிழகப் பொலிசார் கைது செய்துள்ளனர். இவர் திருச்சியில் தமிழர் அகதி முகாம் விடுதியில் முப்பத்தைந்து நாட்கள் தங்கியிருந்ததாகவும், பின் சென்னை எழும்பூருக்கு வந்ததாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

மேலும் முப்பது வயது மதிக்கத்தக்க இலங்கை வாலிபர் ஒருவரது சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் செங்கை - அண்ணா மாவட்டம் லக்குமிபுரம் பகுதியில் கிடக்கக் காணப்பட்டதாக தெரியவருகிறது.

# இந்திய தேர்தல் அதிசயம்

(சென்னை)

இந்தியாவில் அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் பல அதிசயங்கள் நடந்துள்ளன. ஆனால் சில குறிப்பிடத்தக்கவை.

வட பெங்களூர் நாடாளுமன்றத் தொகுதியில் பதிவாகியுள்ள மொத்த வாக்குகள் 6,20,518 ஆனால் இத் தேர்தலில் இத்தொகுதியில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் 8,32,465 ஆகும். ஆறு லட்சம் பேரைக் கொண்ட தொகுதியில் எட்டு லட்சத்திற்கும் அதிகமானோர் வாக்களித்துள்ளார்கள். மேலும் இத்தொகுதியில் வெற்றி பெற்ற காங்கிரஸ் காரரான ஜனாப் ஜாபர் ஷெரீப் தற்போதைய ரயில்வேத்துறை அமைச்சர் ஆவார்.

தமிழ்நாட்டுச் சட்டசபைத் தேர்தலில் ஒரு கோடி பேர் வாக்காளர்கள் ஒருகோடியே எட்டு லட்சம் பேர் அ. இ. அ. தி. மு. க. விற்கும் 37 லட்சத்து 75 ஆயிரம் இ. காங்கிரசுக்கும் வாக்களித்துள்ளனர். தி. மு. க. பெற்ற வாக்குகள் 54 லட்சத்து 65 ஆயிரம், பாட்டாளி மக்கள் கட்சிக்கு 14 லட்சத்து 54 ஆயிரம் வாக்குகள். 4 லட்சத்து 15 ஆயிரம் பேர் ஜனதாதள் கட்சிக்கும், 7 லட்சத்து 77 ஆயிரம் பேர் இந்திய பொதுவுடமைக்கட்சிக்கும், 3 லட்சத்து 5 ஆயிரம் பேர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வாக்களித்துள்ளனர்.

ஆனால் அ. இ. அ. தி. மு. க. இ. காங்கிரஸ் கூட்டணி 220 இடங்களையும் ஏனைய எதிர்க்கட்சிகள் தலா ஒவ்வொரு இடங்களையும் மட்டுமே பெற்றுள்ளன.

# சேஷன் பதவி விலக கம்யூ. கட்சி கோரிக்கை

(புதுடில்லி)

தலைமை தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் தன்னிச்சையாகவும், பக்கச் சார்பாகவும் நடந்து கொண்டு தேர்தலை நடத்தியுள்ளமையால் அவர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நேற்று புதுடில்லியில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கோரியுள்ளது.

# ஆந்திராவில் போட்டியிட பிரதமருக்கு அழைப்பு

ஆந்திரப் பிரதேச மாநிலத்திலுள்ள லோக்சபைத் தொகுதியொன்றில் போட்டியிட முன்வருமாறு இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவிற்கு அம்மாநில முதல்வர் ஜனார்த்தன் ரெட்டி வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

நடந்து முடிந்த லோக சபைத் தேர்தலில் நரசிம்மராவ் போட்டியிடவில்லை என்பதும், பிரதமர் பதவியை தொடர்ந்து வகிக்க வேண்டுமானால் அவர் ஆறு மாதத்திற்குள்ளாக லோக சபைத் தொகுதியொன்றில் போட்டியிட்டு வெற்றி பெற வேண்டும் என்பதும் தெரிந்ததே.

# ஐ. நா பிரதிநிதியை பர்மா அனுமதிக்க மறுப்பு

(நியூயோர்க்)

மனித உரிமைகள் மீறல் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஐ. நா பிரதிநிதியை அனுமதிக்கப் பர்மா மறுத்துள்ளது. மாறாக வேறொருவரின் பெயரை பர்மா சிபார்சு செய்துள்ளது.

பர்மாவின் இந்த நடவடிக்கையானது ஐ. நா பொதுச் சபை பர்மாவுக்கு எதிராகத் தீர்மானங்களை நிறைவேற்ற வழிவகுக்கும் என்று ராஜதந்திரிகள் கருதுகிறார்கள்.

இவ்வாண்டு ஆரம்பத்தில் ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு நியமித்த யப்பான் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் யோகோட்டாவையும் விசாரணை செய்ய விடாமல் பர்மா தடுத்தது. பதிலாக பர்மா ஐ. நா அமைப்பைச் சேர்ந்த பிலிப்பைன் பிரஜையான கியூ கிம்பிங் என்பவரை அனுப்புமாறு பர்மா கோரியது இது வழமைக்கு மாறான கோரிக்கையாகும்.

அவசியம் ஏற்படின் விசாரணை செய்யாமலே அறிக்கை தயாரிக்க வேண்டி ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலி, சூரான், அப்கானிஸ்தான் ஆகிய நாடுகளே இது வரை மனித உரிமைகள் மீறல் விசாரணையைத் தடை செய்துள்ளனர்.

# வலம்புரியை தருமாறு கோரிக்கை

(ஈச்சமோட்டை)

குறிகட்டுவானுக்கும், நெடுந்தீவுக்கும் இடையில் சேவை புரிந்த வலம்புரி படகை கடற்படையினர் அபகரித்து தங்கள் தேவைக்கு பயன்படுத்துவதால் பொதுமக்கள் தங்களுடைய போக்குவரத்துக்கு பெருங்கஷ்டப்படுவதால் கடற்படையினர் வலம்புரி படகை தங்கள் பாவனையில் இருந்து கைவிடுமாறு யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார்.

இதுபற்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் அறிவித்திருப்பதாக அவர் கூறினார். (43)

# கண்டியில் தீ விபத்து

புடவைக்கடை, பிளாஸ்டிக் விற்பனை நிலையம் போன்ற பல்வேறு கடைகள் கொண்ட கடைத் தொகுதியொன்று தீப்பிடித்துக் கொண்டதால் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியான சொத்துக்கள் எரிந்து நாசமாகியுள்ளன. கண்டி கொட்டுகொடெல்ல வீதியில் இடம் பெற்ற இத் தீவிபத்துச் சம்பவத்தில் சிக்கிக் கொண்டவர்களை மீட்க பொலிசாரும், தீயணைக்கும் படையினரும் பெரும் போராட்டம் நடத்தினர். சுமார் ஐந்து மைல் தூரம் வரை இத் தீச்சுவாலை தெரிந்ததாம். மின் ஒழுக்கே காரணம் எனச் சொல்லப்படுகிறது.


## பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம்

## பழைய மாணவர் சங்கம்

## பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. அங்கத்தவர்களாகச் சேர விரும்புபவர்களும் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புபவர்களும் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

வி. சே. ஏகாம்பரநாதன் — தலைவர்
க. சண்முகநாதன் — செயலாளர்

(B-2767)



## யாழ். பல. நோ. கூ. சங்கம்-வரையுள்ளது

## பயிலுநர் கிளை முகாமையாளர் விற்பனையாளர் பதவி

## விண்ணப்பம்

மேற்படி சங்கத்தினால் பயிலுநர் கிளை முகாமையாளர், விற்பனையாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிலுநர் கிளை முகாமையாளர்: க. பொ. த. (சாதாரண தரம்) தத்தில் கணிதம் / வர்த்தக எண் கணிதம் / எண் கணிதத்துடன் தமிழ் பாஷை உட்பட 4 திறமை சித்திகளுடன் கூடிய 6 பாடங்களிற் சித்தி

பயிலுநர் கிளை விற்பனையாளர்: 8-ம் வகுப்பில் சித்தி

வயதெல்லை: பயிலுனர் கிளை முகாமையாளர் 22 - 40 வரை

பயிலுநர் கிளை விற்பனையாளர் 18 - 40 வரை

சம்பளம்: பயிலுநர் கிளை முகாமையாளர் - பயிற்சிக் காலத்தின் பொழுது நாளொன்றுக்கு ரூபா 60/- வீதம் வழங்கப்படும்.

பயிலுநர் கிளை விற்பனையாளர் - பயிற்சிக் காலத்தின் பொழுது நாளொன்றுக்கு ரூபா, 50/- வீதம் வழங்கப்படும்.

பிணை: பயிற்சியை வெற்றிகரமாக முடித்து, பணிக்கு நியமிக்குமிடத்து சங்கத்தால் கோரப்படும் பிணை செலுத்தப்பட வேண்டும்.

சங்கத் தொழில் பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 10-7-91

மேலதிக விபரங்களை சங்க தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்

291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
1-7-91

(B/2768)



## வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

## கிராமியவங்கி முகாமையாளர் 205.10

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ் மாவட்டத்தில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி 17-7-91 ஆகும். விண்ணப்பப் படிவங்களை ரூபா 1/- செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் 'பொது முகாமையாளர், வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி' என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றேல் பதிவுத் தபால் மூலமோ அனுப்பப்படல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிக்கப்படல் வேண்டும்.

1. கிராமிய வங்கி முகாமையாளர்: சம்பள அளவு 205 10

சம்பளத்திட்டம்: 855 - 1385 / 307 - 408

வயதெல்லை; 23 - 40 வருடங்கள் (சங்கப் பணியாளர்க்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது)

கல்வித்தகைமை: 1. கிராமிய வங்கிப் பிரிவில் 11-வது சம்பளத்திட்டத்தில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவமுள்ள கூட்டுறவுப் பணியாளர் அல்லது ஒத்த பதவியில் 12-வது சம்பளத்திட்டத்தில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ள கூட்டுறவுப் பணியாளர்.

அல்லது

2. கிராமிய வங்கிப் பிரிவில் லிகிதர் பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும், கூ. ப. த. ப. (உயர்பிரிவு) மும் உடைய கூட்டுறவுப் பணியாளர்)

பொது முகாமையாளர்

நீர்வேலி
1991-06-29.

(B/2768)

## சிந்தனைக்கு

கடனாளியைவிட கடன்
கொடுத்தவருக்கு நினைவாற்றல்
அதிகம்

— பெஞ்சமின் ஃபிராங்கிளின்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 03.07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
தூ.பெ.எண் 05


# உதவி வழங்குவோரை திருப்திப்படுத்த முயற்சி

சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியைச் சீர் செய்வதில் தீவிர கவனம் செலுத்துவதாகத் தெரிகின்றது. சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடி ஒரு தொடர் கதையாயினும் முன்னைய வருடங்கள் யாவற்றையும்விட இவ் வருடம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு இலங்கையின் வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தம் உட்பட வழமையான காரணிகள் இருப்பினும் இம்முறை கடந்த காலம் யாவற்றையும்விட வெளிநாட்டு உதவிகள் போதியளவில் கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்க முடியாமையே பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடைவதற்குக் காரணமாகும்.

இதற்கு வளைகுடாவில் ஏற்பட்ட போர் கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் மூன்றாம் உலக நாடுகளுக்கான உதவியைக் குறைக்கும் பொதுவான காரணியாக இருப்பினும் சிறிலங்காவைப் பொறுத்து பிரித்தானியத் தூதுவர் கிளஸ்ரோன் விவகாரமும், மனித உரிமைகள் விவகாரமும் உதவியைப் பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதை உறுதிப்படுத்துவதுபோல் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் பரிஸ் மாநாடு ஒக்டோபர் வரையும் பின்போடப்பட்டுள்ளது. மேலும் கிளஸ்ரோன் விவகாரத்தில் சிறிலங்காவின் செயல் ஏற்புடையதல்ல என ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் குறை கூறியுள்ளது.

இந்நிலையில், நவம்பர் மாதம் சிறிலங்காவின் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. பொதுவாகவே பெரும் பற்றாக்குறையுடன் வெளிவரும் வரவு செலவுதிட்டம் வெளிநாட்டு உதவி மேலும் குறைக்கப்பட்டால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகக்கூடும். அதேவேளை வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்காது விடில் நிதிவழங்கும் நாடுகளின் உதவியைப் பெறுதல் என்பது சாத்தியமாகாது போகலாம். கடந்த வருடம் இந்திய அரசாங்கம் வரவு செலவுத்திட்டத்தைச் சமர்பிக்காமையால் சர்வதேச நிதி நிறுவனங்கள் இந்தியாவிற்கான உதவிகளை இடை நிறுத்தியதால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை சிறிலங்கா மறந்திருக்காது.

இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கம் நிதி நிறுவனங்களினதும் உதவி வழங்குபவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வந்துள்ளதோடு சலுகைகளையும் அறிவிக்கவுள்ளது.

இதன் பிரகாரம் சர்வதேச நாணய நிதியத்தின் சிபார்சிற்கேற்ப இறக்குமதி வரியைக் குறைக்கவுள்ளது. இக்குறைப்பு இவ்வருட முடிவிற்குள் செயற்படுத்தப்படவுள்ளது. தற்பொழுது சிறிலங்கா அரசாங்கம் கடைப்பிடிக்கும் இறக்குமதித் தீர்வை பொதுவாக சார்க் நாடுகளில் கடைப்பிடிக்கப்படுவது போன்று 25 வீதத்திற்கும் 30 வீதத்திற்கும் இடைப்பட்டதேயாகும். ஆனால், வரி விதிப்பு குறைப்பின் மூலம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு இழப்புக்கள் ஏற்படும் ஆயினும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியே அவசியமாகத் தேவைப்படுவதால் இவ்வரியிறக்கம் தவிர்க்க முடியாமல் மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோன்று நிதிவழங்குபவர்களின் சிபார்சின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களை தனியார் மயப்படுத்தல் திட்டமும் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. விரைவில் இத்திட்டத்தின் பிரகாரம் சீமெந்துக் கூட்டுத்தாபனம், உரக் கூட்டுத்தாபனம் உட்பட ஆறு கூட்டுத்தாபனங்கள் தனியார் மயப்படுத்தப்படவுள்ளன. அதேபோன்று போக்குவரத்துச் சபையும் மிகவும் வேகமாக 'மக்கள் மயப்படுத்தப்பட்டு' தனியார் மயமாகி வருகின்றது. வடமேற்குப் பிராந்திய போக்குவரத்துச் சபைக்குரிய பதினொரு டிப்போக்கள் கடந்த 29 ஆம் திகதி ஒரே நாளில் மக்கள் மயப்படுத்தப்பட்டன.

இவ்வாறாக ஒருபுறம் உதவி வழங்கும் நிறுவனங்களின் யோசனைகளை நிறைவேற்றிவரும் அதேவேளை மேற்குலகின் குறிப்பாக அமெரிக்காவின் விருப்புக்களையும் நிறைவேற்றிவைத்தலில் சிறிலங்கா தீவிரமாகவுள்ளது. இந்திய எதிர்ப்பின் மத்தியிலும்கூட அமெரிக்காவின் ஒலிபரப்பு நிலையமான வொய்ஸ் ஒப் அமெரிக்கா நிலையத்திற்கான அனுமதியை சிறிலங்கா வழங்கியுள்ளது. இதன்மூலம் அமெரிக்காவின் கடைக்கண் பார்வையை சிறிலங்கா எதிர்பார்க்கின்றது.

சிறிலங்காவின் இவ் அவல நிலை இவ்வருடத்துடன் மட்டும் நின்றுவிடப்போவதில்லை சிறிலங்கா அரசாங்கத்தின் இனவாதப்போக்கு நீடிக்கும்வரை நீண்டு கொண்டேபோகும். இனவாதப் போக்கு நீடிக்க நீடிக்க சிறிலங்காவின் கொள்கை வகுப்பாளர்களாக சர்வதேச நிதி நிறுவனங்கள் மாறிக்கொண்டே வருவார்கள்.

# தமிழர் வாழ கனவு கண்ட பாவலன்

ஊர்கேட்டேன்! இன்னுயிர் உரிமை கேட்டேன்!
ஒளி ஆர்ந்த தமிழீழம் ஆள நீங்கள்
ஆர்? என்று சிங்களர் அதிரக் கேட்டேன்
அறம் கேட்டேன்! எனைச் சிறை அடைத்தே
போட்டார்!

— கவிஞர் காசிஆனந்தன் —

கவிதைகள் காலத்தைக் காட்டும் கண்ணாடிகள் என்று சொல்லப்படுவது உண்டு. காலத்தை வென்று நிற்கும் கவிதைகளையும், எதிர்கால நிகழ்ச்சிகளை முன்னறிந்து கூறும் தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தும் ஆற்றல்மிக்க படைப்புக்களையும் தரும் கவிஞர்கள் வெகு அரிதாகவே தோன்றுகின்றனர். இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கம் சுப்பிரமணிய பாரதியைப் பிரசவித்தது போல - திராவிட இயக்கம் பாரதிதாசனை பிறப்பித்தது போல தமிழீழத் தேசிய போராட்டத்தில் முளைவிட்டு முகிழ்த்தெழுந்தவர் கவிஞர் காசி ஆனந்தன். ஆனால் முன்னையவர்களைப் போல எழுதுவதோடும் - தாம் எடுத்த இலட்சியத்தைப் பிரசாரம் செய்தது என்பதோடு மட்டும் அமையாமல் - சிறையையும், சித்திரவதையையும் அனுபவித்தவர். தலைமறைவு வாழ்வு கொள்ளவும் தயங்காதவர். அதாவது போராட்டத்திற்கு வெளியே இருந்துகொண்டு ஆதரவுக் குரல் கொடுப்பவராக அல்லாமல் தானே ஒரு போராளியாகி போராட்டத்துடன் இரண்டறக் கலந்தவர். உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்த உணர்ச்சியில் பிறப்பெடுத்த சொற்களால் படிப்போர் உள்ளத்தில் அத்தகைய உணர்ச்சிகளை தோற்ற வைக்கும் பாவலர் காசிஆனந்தன் அதனாலேயே தமிழ்நாட்டின் ''நாம் தமிழர் இயக்கத்தின் தந்தை'' என குறிக்கப்படும் சி. பா. ஆதித்தனார் அவர்களால் ''உணர்ச்சிக் கவிஞர்'' என்னும் பட்டப்பெயர் சூட்டப்பட்டவர்.

இன்னல்களுக்கும் பெருமூச்சுக்களுக்கும் மத்தியில் அவற்றைச் சுமந்து கொண்டே சுதந்திரப் பண் இசைக்கும் இந்தப் பாட்டுக்குயில் மட்டக்களப்பு மாவட்டத்தின் நாவற்குடா என்னும் சிற்றூரில் 4-4-1938 இல் காத்தமுத்து- அழகம்மா தம்பதியருக்கு மகனாகப் பிறப்பெடுத்தார். பன்னிரண்டு வயதுப் பாலகனாக இருந்தபோதே கவிதை பாடும் வல்லமை அவருக்கு வாய்த்திருந்தது. சிங்களமட்டும் சட்டம் அமுலுக்குவந்த 1957 ஆம் ஆண்டிலேயே மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் உள்ளே புகுந்து அங்கிருந்த பெயர்ப் பலகையில் சிங்கள எழுத்துக்களுக்கு தார் பூசி அழித்தார். இதனால் பொலீசாரின் கொடுமையான தாக்குதலுக்கு ஆளாகி இரத்த வாந்தி எடுத்தார். இதன் விளைவாக காச நோயாளியாகினார்.

1959 ஆம் ஆண்டு முதல் 1963 ஆம் ஆண்டு வரையில் தமிழ் நாட்டில் பட்டப்படிப்பினை மேற்கொண்டார். காஞ்சிபுரத்திலும், சென்னையிலும் பச்சையப்பன் கல்லூரி மாணவராக இருந்தபோது பாவேந்தர் பாரதிதாசன் உட்பட தமிழ்நாட்டில் பலரது அறிமுகமும் அவருக்கு வாய்த்தது. 1963 இல் சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவர் அலுவலகத்திற்கு முன்பாக உண்ணாவிரதம் இருந்ததன் மூலம் முதன்முதலாக தமிழர் பிரச்சினையை இந்திய மண்ணில் எதிரொலித்தவர்.

பட்டப்படிப்பை முடித்த கவிஞர் காசிஆனந்தன் அவர்கள் அரசு மொழிபெயர்ப்பாளராக சிறிலங்கா அரசில் சிறிதுகாலம்பணியாற்றினார். 1972 ஆம் ஆண்டில் பிரகடனம் செய்யப்பட்ட சிறிலங்காவின் புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களை அடிமையாக்கியிருப்பதைக் கண்டனம் செய்து கை நிறையச் சம்பளம் வாங்கிய பதவியைத் தூக்கி எறிந்து போராட்டக்களத்தில் இறங்கினார்.

புதிய அரசியலமைப்பை எதிர்த்து பிரசாரப் பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தபோது 1972 இல் மன்னார் மாவட்டத்தில் வைத்து சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

அது முதல் 1977 ஆம் ஆண்டு வரை (இடையில் ஒருமுறை தங்கள் விடுதலை செய்யப்பட்டாராயினும்) தொடர்ந்து கொடிய இந்தச் சிறைவாசத்தை கவிஞர் அவர்கள் அனுபவிக்க நேர்ந்தது. கவிஞரது உடன்பிறப்பினரான சிவஜெயம், சுதர்சன், தங்கை சிவமலர் ஆகியோரும் கூட சிறைவாசத்தைச் சந்திக்க நேர்ந்தது. சிவஜெயம் அவர்கள் பின்பு இந்தியப்படையுடனான மோதலின் போது வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்.



வங்களை தமிழ் மொழிக்கு அறிமுகம் செய்தவரும் கவிஞர் அவர்களே.

தேசிய இன எழுச்சியைத் தூண்டுவதில் மட்டுமன்றி சமூக முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் சாதி உணர்வுகளை எதிர்ப்பதிலும், சமத்துவ உணர்வை வளர்ப்பதிலும் கவிதைகளை படைக்கத் தவறவில்லை கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் பிரதேச வேறுபாடுகளையும், மதமுரண்பாடுகளையும் கடந்து தமிழ்த் தேசியமாக மாபெரும் சக்தியாக -- தமிழர் சேனை உருப்பெறுதல் வேண்டும், அதன் மூலம் தமிழ்நிலமாம் -- தமிழ் ஈழம் விடுதலை சமத்துவ பூமியாக மலர வேண்டும், என்று கனவு கண்டகவிஞரின் ''வாருங்கள் புலிகளே! தமிழ் ஈழம் காப்போம்'' எனத் தொடங்கும் பாடலின் ஒவ்வொரு வரியும் பயிற்சிப் பாசறையில் வளரும் இளம்புலி வீரரின் உணர்ச்சி நரம்புகளுக்கு வலுவேற்றுவதாகும்.

முந்தை எங்கள் தந்தை வாழ்ந்த முற்றமாம் எம் அன்னை தாயக மண்ணை விடுதலை பெறச் செய்தே தீர வேண்டும் என்னும் வீர உணர்ச்சியை விதைப்பதாகும்.

இத்தகைய ஆற்றல் மிக்க

> அண்மையில் நிறைவெய்திய முத்தமிழ் விழா நிகழ்ச்சிகளில் உச்சக்கட்டமாக அமைந்தது தமிழீழ தேசிய விருது வழங்கும் வைபவம். தமிழீழ தேசியத் தலைவர் வே பிரபாகரன் அவர்கள் அலைகடலெனத் திரண்டிருந்தமக்கள் கூட்டத்தினிடையே தேசிய விருதுகளை தாமே நேரில் வழங்கிக் கௌரவித்தார். போராட்ட இலக்கியப் பங்களிப்புக்காக தேசிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட கவிஞர் காசி ஆனந்தன் அவர்களைப் பற்றிய குறிப்பொன்றை இங்கே காணலாம்.

அமுதநிலா, தேனல்லி ஆகிய இரு பெண் குழந்தைகளுக்கு தந்தையான கவிஞர் அவர்கள் 1978 இல் கியூபா, ரஷ்யா போன்ற நாடுகளுக்கும், 1982 இல் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கும் சென்று தமிழ் ஈழத்தின் விடுதலை முழக்கத்தை ஒலித்தவர்.

பொங்கு வெறியர் சிறை மதிலுள் எனைப்
பூட்டி வதைத்தாலும் - என்றன்
அங்கம் பிளந்து விழுந்து துடிக்க
அடிகள் கொடுத்தாலும் - உயிர்
தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்
துகள்பட நேர்ந்தாலும் - ஒரு
செங்களம் ஆடி வரும் புகழோடு
சிரிக்க மறப்பேனா?

எனப் பாடிய கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் 1965 இலேயே தமிழர் சேனை அமைக்கப்பட வேண்டும் என்றும் அது போராடித் தமிழ் ஈழத்தை விடுவிக்க வேண்டுமெனவும் கனவு கண்டவர். 'தமிழன் கனவு' என்ற அவரது நூலில் தமிழர் படை நடத்தப்படும் விதம் குறித்த தமது எண்ணங்களை காலமுனிவன் கூற்றாக முன் மொழிந்துள்ளார்.

மறவர் படைதான் தமிழ்ப்படை
குலமானம் ஒன்று தான் அடிப்படை
வெறிகொள் தமிழர் புலிப்படை - அவர்
வெல்வார் என்பது வெளிப்படை - என்று தமிழீழ

விடுதலைப்புலிகள் இயக்கம் தோன்றுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பாகவே கட்டியம் கூறியவர் கவிஞர் அவர்கள். தமிழ் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதிலும் புத்துணர்ச்சி ஊட்டிப் போர்க்களமாட வைத்ததிலும் கவிஞரின் ஆளுமை மிக்க படைப்புகள் அருந்துணையாகியது. தமிழன் கனவு, உயிர் தமிழுக்கு, தமிழா உன்னைத் தான், காசி ஆனந்தன் கவிதைகள், படகோட்டியின் பாடல் போன்ற பல படைப்புக்களைத் தந்தவர் காசி ஆனந்தன் அவர்கள். இது மட்டுமன்றி 'மாத்திரைக் கதைகள்' என்ற குறுங்கதை வடி

ஒரு கவிஞனை அவர் வாழும் காலத்திலேயே கௌரவிக்க விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம் எடுத்த முடிவுசாலப்பொருத்தமானதே.

## சுவரொட்டிகள்

தமிழ் நாட்டில் பல இடங்களிலும் இலங்கைத் தமிழர்கள் ஒரு வாரத்துக்குள் தம்மைப் பொலிஸில் பதிவுசெய்ய வேண்டுமென்று கோரும் பெரும் சுவரொட்டிகள் எங்கும் காணப்பட்டன இவ்வாறு பதிவு செய்யாதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் நாடு கடத்தப்படநேரிடலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

# தொண்டர் ஆசிரிய நியமனங்கள் பின்போடப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர் ஆக்குவதற்காக வழங்கப்படவிருந்த நியமனங்கள் காலவரையறையின்றி பின்போடப்பட்டுள்ளன.

வடக்குக் கிழக்கில் தொண்டர் ஆசிரியர்களாக 89 ஆம் ஆண்டுமுழுவதும் கற்பித்தவர்களைப் பயிலுநர் ஆசிரியர்களாக நியமிப்பது என்ற அரசின் திட்டத்தின் கீழ் வடக்கில் ஐநூறு பேர் ஆசிரியர் நியமனம் பெறத்தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இவர்களுக்கான நியமனங்கள் வழங்குவது தொடர்பாகப் பல திகதிகள் அறிவிக்கப்பட்டது தெரிந்ததே. ஆனால் பிந்திக் கிடைத்த செய்தியின்படி நாடு சகஜ நிலைக்குத் திரும்பும் வரை இவர்களுக்கான நியமனங்கள் வழங்குவது பின்போடப்பட்டுள்ளதாக யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடபகுதி இராணுவ நடவடிக்கைகளால் வலி வடக்கில் பல பாடசாலைகள் இடம் மாற்றப்பட்டுள்ளன. அங்கே முன்னர் கல்வி பயின்ற மாணவர்களில் தொண்ணூறு வீதமானோர் வேறு பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். பல ஆசிரியர்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இதனால் இந்த ஆசிரியர் நியமன விதிகளின்படி தொண்டர் ஆசிரியர்களாகத் தற்போது கற்பித்துக்கொண்டிருக்கும் பாடசாலைகளிலேயே நிரந்தர நியமனம் வழங்கப்படல்வேண்டும்.

அதேவேளை இராணுவ நடவடிக்கையுள்ள இடங்களில் இருந்த பாடசாலைகள் வேறு பாடசாலைகளில் இயங்குகின்றன. அங்கே மாணவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவு. அங்கே கற்பித்துக்கொண்டிருக்கும் நிரந்தர ஆசிரியர்களின் எண்ணிக்கையே கூடுதலாகவுள்ளது. இந்நிலையில் எவ்வாறு தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்களை வழங்கமுடியும் என அவர் வினவினார்.

இதனாலேயே இவர்களுக்கான நியமனங்களைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கல்விச்சேவைகள் ஆணையாளர் தமக்குத் தெரிவித்ததாக அவர் தெரிவித்தார். (ச)

### சாகித்திய பரிசு

அரசு தமிழர்களுக்கு இழைக்கும் அநீதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் விருது பெற்றவர்களில் ஒருவர் விருதுகளை வேண்டாமென்று அலட்சியமாக உதறி எறிந்து விட்டனர்.

செய்வதறியாத சாகித்திய அக்கடமி பரிசுத் தொகைகளை ரூபா 10,000 விருதுபெற்றவர்களுக்குக் காசோலையாகத் தபாலில் அனுப்பி வைத்துள்ளது. இருவர் மாத்திரம் பரிசுப் பணத்துக்கான காசோலையை ஏற்க மறுத்துத் திருப்பி அனுப்பியுள்ளனர் என்று தெரிய வருகிறது.

இது இப்படியிருக்க, ஒருவர் மாத்திரம் கொழும்பு சென்ற ஒருவரிடம் தனது காசோலையைக் கையளிக்கும்படி தந்து வமளிக்கும் கடிதம் ஒன்றைக் கொடுத்துத் தன் காசோலையைப் பெற்றுக் கொண்டாராம். இவருடைய காசோலை யாழ்ப்பாணத்தில் உயர்கல்வி நிலைய ஆசிரியர் கழக அறையில் வைத்து சம்பந்தப்பட்ட இவரிடம் கையளிக்கப்பட்டதாகச் செய்தி.

### ஆனைமிறவு

குண்டுவீச்சு விமானங்களும், ஒரு பயணிகள் விமானமும் பத்துக்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியுள்ளன.

நேற்றுமுன்தினமும் காலை, மாலை வேளைகளில் விமானத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே. நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு மீண்டும் வந்த இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் மாலை 5.30 மணிவரை நான்கு தடவைகள் குண்டுகளை வீசியுள்ளன.

இத்தாக்குதல்களால் ஏற்பட்ட சேத விபரங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

### தமிழக

கொடுத்திருந்தார்கள். இவர்கள் இருவரும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதாகப் பேரவையின் தற்காலிகத் தலைவர் திருமதி ஏ. எஸ். பொன்னம்பலம் இன்று பேரவையில் உத்தியோக பூர்வமாக அறிவிப்பார்.

## யாழ். மாவட்டத்தில் செயற்திட்டங்கள் மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவிருந்த செயற்திட்டங்கள் யாவும் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

இம் மாவட்டத்தில் சகல திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் நிறுவனங்களின் ஊடாக மேற்படி நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்வதற்கென ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயற்திட்டங்களும், நிதி ஒதுக்கீட்டு அளவுகளும் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. மீளாய்வைத் தொடர்ந்து புதிய செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்படவிருக்கின்றது.

இவ் விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக இம் மாவட்டத்தின் திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் மிக விரைவில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடாத்தவுள்ளனர் என்று செயலகத்திலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## சஞ்சிகை தொடர்பான கலந்துரையாடல்

(நல்லூர்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் வெளியிடவுள்ள இலக்கிய சஞ்சிகை பற்றிய கலந்துரையாடலொன்று நேற்று நல்லூரில் இடம்பெற்றது. திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் விடுதலைப்புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் உட்பட கல்விமான்கள், அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

### வீரவணக்கம்

மேஜர் விவேக் (தனராஜ் பூரணவேலுப்பிள்ளை - வல்வெட்டித்துறை) வீரமரணம் அடைந்தார்.

இவர்கள் இருவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### திருமலை

வடக்குளத்தில் முப்பத்தைந்து வீடுகளை எரித்தும் நெய்யந்திக் குளத்தில் ஆறு வைக்கோல் சூடுகளைத் தீயிட்டும் நாசமாக்கியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### சுற்றி

அச்சமயம் இராணுவத்தின் மீது புலிகள் கடுமையான எதிர்த்தாக்குதலை மேற்கொண்டதாகவும் இத்தாக்குதல் முப்பது நிமிடங்களிற்கு மேல் நீடித்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவத்தில் இராணுவத்தினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரிய வருகிறது. எனினும் இராணுவத்தினரின் சேத எண்ணிக்கை விபரம் இதுவரை கிடைக்கவில்லை.

## பெற்றுக்கொள்ளவும்

(வடமாராட்சி)

கடந்த 28.6.91 அன்று தம்பசிட்டியில் கண்டெடுக்கப்பட்ட சில ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க பணம் வடமராட்சி மக்கள் முன்னணிக் காரியாலயத்தில் மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் அரசண்ணாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் மொத்தத் தொகை, அடையாளம் என்பவற்றைக் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (18)

## புலவர் கோவிந்தன் மரணமானார்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையின் முன்னாள் தலைவர் புலவர் கோவிந்தன் நேற்று அதிகாலை மாரடைப்பால் காலமானார். இவருக்கு வயது 74.

### இலங்கையில்

யத் தொழிலில் காலத்தைப் பயன்படுத்துவதாக இவ் அதிகாரி மேலும் தெரிவித்தார் அத்துடன் மலேரியாத் தடுப்பு வேலைகளுக்கு யப்பானினால் வழங்கப்பட்ட 61 வாகனங்களில் 11 வாகனங்கள் மாத்திரம் தடுப்பு வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன, மிகுதி வாகனங்கள் சிறிலங்கா இராணுவத்தின் பாவனையில் உள்ளன.

மலத்தியோன் களவாடப்படுவதும், வாகனங்களைப் பராமரிப்பதற்கு ஒதுக்கப்படும் பணம் கூடத் தேவைக்குப் போதாமல் இருப்பதும் மலேரியாத் தடுப்பு வேலைகளில் பின்னடைவு ஏற்பட்டதற்கான காரணங்களாகும். மற்றும்படி மலேரியாக் காய்ச்சலுக்கு ஒரு நியம வைத்திய முறையையாளப்படுவதில்லை. ஆஸ்பத்திரிக்கு ஆஸ்பத்திரி மலேரியாச் சிகிச்சை முறையில் வித்தியாசம் காணப்படுகிறது.

இவ்வாண்டில் மலேரியாக் காய்ச்சல் கம்பஹா, மாறமா, ஜா-எல ஆகிய இடங்களில் புதிதாகப் பரவியுள்ளது. இது வரை இப் பகுதிகளில் 1 500 பேர் மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

### தி மு. க. தலைவர் கருணாநிதி

## பதிலடிக்குப் பயந்தே பதவி துறந்தார்

(புதுடில்லி)

\- அன்பரசு

தனது முன்னைய நடத்தைக்கு பதிலடி கிடைக்குமென அஞ்சியே தி. மு. க தலைவர் மு. கருணாநிதி சட்டசபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்திருக்கிறாரென இந்திரா காங்கிரஸ் எம். பியான இரா. அன்பரசு கூறியுள்ளார்.

## யாழ். மத்திய கல்லூரி றோயலை வென்றது

(லண்டன்)

லண்டனில் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் கிறிக்கெட் அணி றோயல் கல்லூரி அணியைத் தோற்கடித்து வெற்றிக்கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்டது.

சுமார் பத்தாயிரம் இலங்கை ரசிகர்கள் லண்டனிலுள்ள வேம்பிற்றர் பார்க் மைதானத்தில் இந்த ஆட்டத்தைப் பார்க்க கூடியிருந்தார்கள்.

முதல் சுற்று ஆட்டத்தில் மத்திய கல்லூரி அணி கண்டி புனித அந்தனீஸ் அணியை எதிர்த்து ஆடி வென்றது. இரண்டாவது சுற்று வட்டத்தில் புனித தோமஸ் கல்லூரி அணியையும் மத்திய கல்லூரி அணி வென்றது. அடுத்த வட்டத்தில், மத்திய கல்லூரி நாலந்தாக் கல்லூரியுடன் ஆடி நாலந்தாவை தோற்கடித்தது. இந்த ஆட்டத்தில் இலங்கைத் தேசிய வீரர் கீர்த்தி ரணசிங்கா நாலந்தா பழைய மாணவர் அணிக்குத் தலைமை தாங்கினார்.

இறுதி ஆட்டம் யாழ். மத்திய கல்லூரிக்கும், றோயல் அணிக்குமிடையில் நடந்தது யாழ் மத்திய கல்லூரி றோயல் அணியைத் தோற்கடித்தது.

## கோழித் தகராறில் ராக்கெட் பாவனை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் மிரான்ஷா நகரில் ஒருகோழி சம்பந்தமாக இரு குடும்பங்களுக்கு இடையே ஏற்பட்ட சண்டையில் ராக்கெட்டுகள், நவீன துப்பாக்கிகள், கைக்குண்டுகள் ஆகியன உபயோகிக்கப்பட்டதாகவும், இச்சம்பவத்தில் நால்வர் கொல்லப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

ஆப்கான் கெரில்லாக்களுக்கு வழங்கப்படும் பயங்கரமான அமெரிக்க ஆயுதங்களின் பெரும் பகுதியை விற்பனை செய்கிறார்கள். பாகிஸ்தான் உளவுப் பிரிவின் மூலமாக ஸ்டிங்கர் ஏவுகணைகள் கூட உருளைக்கிழங்கைப் போல் பகிரங்கமாக விற்பனை செய்யப்படுகின்றன என இடதுசாரி அவாமி தேசியக் கட்சியின் தலைவரான வலிகான் "புறன்டியர் போஸ்ற்" என்ற பத்திரிகைக்குப் பேட்டியளித்துள்ளார்.

மலைவாசிகளின் பகுதிகளில் ரைபிள்களும், ராக்கெட் உந்து கருவிகளும், மோட்டர்களும் தாராளமாக உபயோகிக்கப் படுவதாகவும், மலைவாசித் தலைவர்களின் வீடுகள் விமான எதிர்ப்புப் பீரங்கிகளினால் பாதுகாக்கப்படுவதாகவும், பல குழாய்கள் கொண்ட ராக்கெட் உந்துகருவி ஒன்றை மலைவாசித் தலைவர் ஒருவரின் வீட்டில் தாம் கண்டதாகவும் திரு. வலிகான் தெரிவித்துள்ளார்.

ராவல்பிண்டியில் உள்ள ஒஜ்ரி ஆயுதக் கிடங்கிலேயே ஆப்கான் முஜாஹிதீன் கெரில்லாக்களுக்கான ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ளதாகவும், ஒஜ்ரி ஆயுத முகாமிலிருந்து மிகப்பயங்கரமான ஆயுதங்கள் இராணுவ ஜெனரல்களால் பகிரங்கச் சந்தையில் விற்கப்படுவதைத் தான் கண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யூகோஸ்லாவியாவில் கடும் மோதல் ஆரம்பம்

(பெல்கிரேட்)

யூகோஸ்லாவிய கூட்டமைப்பு இராணுவத்திற்கும் ஸ்லொவேனிய அரசின் பிராந்தியப் படைகளுக்கும் இடையே கடும் சண்டை தொடர்ந்து நடைபெறுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று காலை யூகோஸ்லாவியாவில் விமானப்படை விமானங்கள் லூப்லியானா நகரில் வானொலி நிலையக் கட்டடத்தின் மீது குண்டுகளை வீசியுள்ளன. ஸ்லொவேனியப் பாதுகாப்பு அமைச்சர் யூகோஸ்லாவியா இராணுவம் திட்டமிட்டு இரண்டாம் கட்டத் தாக்குதலைத் தொடர்ந்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். ஸ்லொவேனியாவின் அணுசக்தி மையக் கட்டடத்திற்கு மேலாகவும் யூகோ விமானங்கள் பறந்தன என்றும் இதைத் தொடர்ந்து அந்த மின் நிலையம் மூடப்பட்டது என்றும் தகவல்கள் வந்துள்ளன.

ஸ்லொவேனியப் பாதுகாப்பு அமைச்சர் பல் நாட்டு உதவி அவசரமாக தேவைப்படுவதாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஸ்லொவேனியப் படைகளால் சுற்றி வளைக்கப்பட்டு உள்ள யூகோ இராணுவத்தின் ஒரு பகுதியினரை மீட்க குரோசியாவில் இருந்து யூகோ இராணுவம் விரைந்ததாகவும் இச் செய்திகள் கூறுகின்றன.

### வொய்ஸ் ஒப்

இலங்கை வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் வழக்கமான கூட்டத்தில் இது பற்றி விவாதித்தார்கள் அடுத்து மாலைதீவில் நடக்கப் போகும் சார்க் மாநாட்டிலும் இது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

### பாகிஸ்தானில்

டும் ஏழு பேர் காயமடைந்தும் உள்ளனர். கவிபதா மாகாணத்திலுள்ள சக்கோபார் நகரில் இக்குண்டுவெடிப்பு இடம் பெற்றது. கடையொன்றின் முன்பாக நிறுத்தப் பட்ட வாகனத்திலிருந்து துணிகள் இறக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் இக்குண்டு வெடித்தது.

### சூட்டுக்காயத்துடன்

இவர்கள் ராஜீவின் கொலை தொடர்பாகத் தேடப்பட்டுவரும் சிவராசனின் உருவ ஒற்றுமையை ஆராய்ந்த போது இறந்தவருக்கு இரண்டு கண்களும் உள்ளதாக அடையாளம் காணப்பட்டது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திர வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.